ஒட்டி இருக்கிற ரோடு வரை, இருக்கிற அந்த ஒரு சிங்கிள் ரோடாக இருப்பதை அகலப்படுத்துவதற்கு மட்டுமாவது முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இது கர்நாடகா-கேரளா எல்லையை ஒட்டியது; சுற்றுலாப் பயணிகள் முழுக்க இந்தப் பாதையைத்தான் பயன்படுத்தி உதகைக்கு வருகிறார்கள். இன்றைக்கு உலக அளவில் பிரசித்தி பெற்று இருக்கிற.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. பா.மு. முபாரக்: இந்த சுற்றுலாத் தலத்திற்கு சாலை ஏற்பாட்டை செய்து தர முன்வருவாரா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சாலையினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து இருக்கிற காரணத்தினாலேதான், குறிப்பாக அதுவும் 3 மாநிலங்களை இணைக்கிற சாலையாக இருக்கிற காரணத்தினாலேதான், இதற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசியது மட்டுமல்லாமல், அவர்களுடைய தொகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாகவும் இதை மத்தியிலே எடுத்துச் சொல்லி, குறைந்தபட்சம் தமிழகத்திற்கு—1,000 கி.மீ. என்பதே நான் வாதாடி இருக்கிறேன்; எனக்கு கிடைக்குமா என்பது சந்தேகம்—அது கிடைப்பதற்கு இங்கே இருக்கிற உறுப்பினர்களும் அதற்கு அவர்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலமாக முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி 1,000 கி.மீ. கொடுத்தால்கூட முன்னுரிமையில் இருக்கிற காரணத்தால், அவர் கேட்டு இருக்கிற சாலை நிச்சயமாக வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 116, மாண்புமிகு உறுப்பினர் இ.எஸ்.எஸ். இராமன். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர்.

116—

திருக்குறளைத் தேசிய நூலாக அறிவித்தல்

* *1606*—**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1996 ஆகஸ்ட் 7]

திருக்குறளைத் தேசிய நூலாக அறிவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உலகப் பொதுமறை எனப் போற்றப்படும் 'திருக்குறள்' நூலை தேசிய நூலாக அறிவிக்க் மைய அரசுக்கு வேண்டுகோள் விடத் தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், இருக்கையில் இல்லை.

வினா எண் 117, மாண்புமிகு உறுப்பினர் கே. சுப்பராயன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

117—

கட்டுமானத் தொழிலாளர்களின் நலன்

* 735—**திரு. கே. சுப்பராயன் :**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன் காக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாட்டில் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் நலன் காக்க தமிழ்நாடு அரசு 1982 தமிழ்நாடு உடல் உழைப்புத் தொழிலாளர்கள் (வேலை அமல்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) சட்டத்தினை இயற்றி 1-11-1994 முதல் அமல்படுத்தி வருகிறது. மத்திய அரசும் 2 அவசரச் சட்டங்களைப் பிறப்பித்துள்ளது. இந்த சட்டங்கள் 1-3-1996 முதல் அமலுக்கு வந்துள்ளன. இதன் அடிப்படையில், கட்டிடத் தொழிலாளர்களின் நலன் காக்கத் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.